<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No.223/2025</u>

ம.சா.1 நுர்ஜகான் க/பெ திருப்பதி நாள் : 27.07.2026

<u>4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் கணவர் இறக்கும் போது அவருக்கு வயது 25. அவருடைய ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்டும் ஆதார் அட்டை தான் என் கணவரின் ஆதார் அட்டை என்றால் சரிதான். அதில் அவருடைய பிறந்த தேதி 17.06.1992 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து 17.01.2023 அன்று நடந்தது. அதனால் விபத்தின் போது அவருக்கு 31 வயது என்றால் சரியல்ல. என் கணவரின் வயதை நிரூபிக்க என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை. நாங்கள் காதல் திருமணம் செய்து கொண்டோம் அதை பதிவு செய்யவில்லை. அவர் 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். அவருடைய பள்ளி மாற்றுசான்றிதழ் வீட்டில் உள்ளது. அதை தாக்கல் செய்தால் அவரது சரியான வயதை நிரூபிக்க முடியும் என்றால் சரிதான். என் கணவர் JCB ஆப்ரேட்டராக வேலை செய்து ரூ.30,000/– சம்பாதித்து வந்தார் என்று நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. JCB ஆப்ரேட்டராக வேலை செய்ததற்கு சிறப்பு உரிமம் பெற வேண்டும் என்றால் பெறவில்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.8 என் கணவரின் ஓட்டுநர் உரிமத்தில் அவருக்கு JCB வாகனத்தை ஓட்டுவதற்கு உரிமம் வழங்கப்படவில்லை. என் கணவரின் ஓட்டுநர் உரிமத்தில் எந்த ஒரு விவரங்களும் சரியாக தெரியவில்லை என்பதால் நீதிமன்றத்தில் அதன் அசல் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் விபத்து நடந்த இடத்திற்கு நான் செல்லவில்லை. விவரத்தை கேள்விப்பட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். விபத்து நடந்த இடத்தை நான் பார்க்கவில்லை. என் கணவர் விபத்தால் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். விவரம் தெரிந்து 5 நிமிடத்தில் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். நான் விபத்தை நேரில் பார்க்காததாலும் சம்பவ இடத்தை பார்க்காததாலும் யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் கூறமுடியாது என்றால் சரிதான். இரண்டு இருசக்கர வாகனங்களும் நேருக்கு நேர்

மோதிக் கொண்டது என்றால் அவ்வாறு தான் கேள்விப்பட்டேன். ம.சா.ஆ.17 என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான அந்த வாகனத்திற்கு முன்பக்கம் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மற்றொரு இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். சக்திவேல் என்பவர் விபத்தின் விவரங்களை கூறியதால் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர், ஓட்டுநர் மற்றும் வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு புகார் கொடுத்தேன். சக்திவேல் சாட்சிக்காக இன்று நீதிமன்றம் வந்துள்ளார். என் கணவர் நான் கூறுவது போல் சம்பாதிக்க இல்லை என்றும் வழக்கிற்கான பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.